# DEPOSITION OF WITNESS

## (CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )
## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR

**Case No. S.C. 76/2021**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-3/Lw-2 |
| Name | : | **Mr. சக்தி சரவணன்** |
| Father Name | : | **மதியழகன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.03.2026

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் திருப்பூர் கோல்டன் நகரில் வசித்து வந்து பனியன் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறேன். 29.11.2020 ம் தேதி என்னுடைய வீட்டில் பாளையக்காட்டில் உள்ள சிக்கன் கடையில் சிக்கன் வாங்கி வரும்படி கூறினார்கள். சிக்கன் வாகனம் சென்ற போது மூன்று பசங்கள் வந்தார்கள். அப்போது கடையில் இருந்தவர்கள் திருடன் திருடன் என்று கத்தினார்கள். அப்போது மூன்று பசங்கள் செல்போன் மற்றும் பணம் பறித்து கொண்டு இருந்தார்கள். அப்போது எல்லோரும் திருடன் திருடன் என்று கத்தினார்கள். அவர்களை பிடிக்க முற்பட்ட போது பைக்கில் ஏறி தப்பி சென்று விட்டார்கள். மூன்று நபர்களை தற்போது பார்த்தால் அடையாளம் சொல்ல முடியாது

ரொம்ப வருடங்கள் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. நீதிமன்றத்தில் இன்று ஆஜராக இருக்கும் எதிரிகளை பார்த்து சொல்ல முடியுமா என்று அரசு தரப்பில் கேட்டபோது எனக்கு சரியாக ஞாபகமில்லை. அவர்களுக்கு 19 வயது இருக்கும். இதைப் பொறுத்து காவல் அதிகாரிகள் என்னை விசாரித்தார்கள்.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை:** இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.03.05 18:35:41 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.

# DEPOSITION OF WITNESS

## (CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )
## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR

**Case No. S.C. 76/2021**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-4/LW-3 |
| Name | : | Mr.சதீஸ்குமார் |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.03.2026

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்
அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

**1.** நான் தற்சமயம் திருப்பூர் கோல்டன் நகரில் வசித்து வந்து பனியன் கம்பெனியில் டைலராக பணிபுரிந்து வருகிறேன். 29.11.2020 ஆம் தேதி வளைகாப்பிற்கு செல்வதற்காக பாளையக்காடு பஸ் நிறுத்தத்திற்கு சென்று இருந்தேன். அந்த சமயத்தில் திருடன் திருடன் என்று எல்லோரும் கத்தினார்கள். அப்போது அங்கு கூட்டமாக இருந்தது. அதை மட்டும் நான் பார்த்தேன். அதைப் பற்றி விசாரித்த போது ஃபோனை திருடியதாக தெரிந்து கொண்டேன். போன் திருடிய நபர்களை அடையாளம் காட்ட முடியுமா நான்பாக்கவில்லை. அடையாளம் காட்ட முடியாது நான் பார்க்க ஆஜர்

எதிரிகளை சம்பவத் தேதியில் நான் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை. சம்பவத்தைப் பொறுத்து போலீசார் என்னை விசாரித்தனர்.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை:** இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2026.03.05 18:38:50 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.

**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 76/2021**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-5/LW-6 |
| Name | : | Mr. **ராஜலிங்கம்** |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.03.2026

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் திருப்பூர் பிச்சம்பாளையம் பாரதி நகரில் வசித்து வந்து கூல்ட்ரிங்ஸ் கடை வைத்துள்ளேன். தேதி ஞாபகம் இல்லை. ஐந்து வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நானும், என்னுடைய நண்பர் சண்முகசுந்தரமும் ராயபுரத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம். ராயபுரத்தில் உள்ள ஓட்டல் ஒன்றுக்கு கூட்டமாக இருந்தார்கள். அங்கு காவல் அதிகாரிகளும் நின்று கொண்டு இருந்தார்கள் காவல் அதிகாரிகளிடம் விசாரித்த போது போன் மற்றும் வண்டி திருடியதை பொறுத்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். கும்பலாக இருந்தார்கள் அதை தவிர நான் வேறு எதுவும் பார்க்கவில்லை. விசாரணையின் போது என்னிடம் போலீஸ் அதிகாரிகள்

கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மூன்று ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அந்த சமயத்தில் காவல் அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பது ஞாபகம் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் நான்கு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். நான் தற்போது அடையாளம் காட்டும் கையொப்பங்கள் போலீசார் விசாரணை செய்த இடத்தில் செய்தேன். இதைப் பொறுத்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

2. கையொப்பங்களை எதற்காக செய்தேன் என்று கற்று அறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டபோது காவல்துறை அதிகாரிகள் கேட்டதால் கையொப்பம் செய்வதாக சாட்சி கூறுகிறார். கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி 1 முதல் 3 எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்து அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட பிறகு கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்காக ஆதரவாக சாட்சியம் அளிப்பதால் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்றும் படி கேட்டுக் கொண்டார். கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அதன் அடிப்படையில் அரசு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக மாற்றப்பட்டார்.

<u>சாட்சியை பிறழ்சாட்சியமாக அறிவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

1. கடந்த 29.11.2020 ஆம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு நானும், என்னுடைய நண்பர் சண்முகசுந்தரமும் ராயபுரத்தில் உள்ள தாபா ஹோட்டல் அருகே வந்தபோது எங்களுக்கு முன்பு பதிவு எண் இல்லாத டியோ இரு சக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் வந்ததாகவும் அவர்கள் போலீசாரை கண்டதும் பயந்து ஓடிய போது போலீசார் அவர்களை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்து அவர்கள் முன்னுக்குப் பின்பு முரணாக பதில் அளித்ததால், வழிப்பறி வழக்கில் கைது செய்யப்பட்டு விசாரணையின் போது எந்த ஒரு வற்புறுத்தலும் இன்றி மூன்று எதிரிகளும் தனித்தனியாக தன்னிச்சையாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலங்கள் என் முன்னிலையும் என்னுடைய நண்பர் சண்முகசுந்தரத்தின் முன்னிலையில் கொடுத்தார்கள். அவ்வாறு அவர்கள் கொடுத்த

ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த போலீசார் எங்கள் முன்னிலையில் கையொப்பம் பெற்றார்கள் அதில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம்.

2. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் முன்னிலையிலும் என் நண்பர் முன்னிலையையும் ஒன்று முதல் மூன்று எதிரிகள் தன்னிச்சையாக முன்வந்து எடுத்து ஆதர் செய்ததை போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் தயார் செய்து கைப்பற்றப்பட்ட போது சாட்சிகளாக இருந்து சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்போது எந்த விவரமும் தெரியாது என்று எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**மறு விசாரணை:** இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.03.05 18:38:59 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.